முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம்: 1008

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

03.07.2022, ஞாயிற்றுக்கிழமை

1. ஞான வேலிகொண்ட அரங்கனே
ஞானிகள் துணைகொண்ட தேசிகனே
வானவர்கள் சக்தியாக இறங்கிஉமக்கு
வள்ளல் தன்மை கூட அருளுகின்ற வரம்பெற்ற குருராஜனே
2. அரசனே அரங்கனே உந்தனுக்கு
அருளுவேன் சுப்ரமணியர் யானும் இனிதே
வரமென ஞான அறிவுரை ஆசி
வழங்குவேன் சுபகிருது மிதுன திங்கள் தன்னில்
(சுபகிருது வருடம் ஆனி மாதம் 19 நாள், 03.07.2022 ஞாயிற்றுக்கிழமை)
3. தன்னிலே அரங்கனின் தவபலம் தான்
தரணிக்கு ஆற்றலாக மாறி இனிதே
மண்ணுலகை ஞான பூமியாக்கும்
மாதர்மம் வழங்கும் அரங்கன் தர்மமே
4. தர்ம நிலை பெருகி உலகோர்க்கெல்லாம்
தர்மவான்கள் என்கின்ற அடையாளம் கூடி
கூடியே அவரவர் செயல்களிலும் குறையில்லா தர்ம சிந்தை பெருகி
நாடெங்கிலும் அமைதி பாதுகாப்பு ஞானபூமியாக மாற்றம் காணக்கூடும்
5. கூடவே அரங்கனின் கொள்கை எனும்
குறையில்லாத சன்மார்க்க ஜீவதயவு நெறியே
நாடெங்கிலும் அருள் தயவாக பரவி ஞானவான்கள் என்கின்ற
புதுமையையும் அடையாளத்தையும் ஐயமற அரங்கன் வழிவரும் தொண்டர்கள் மூலமாக
6. ஆக்கமாக உலகமெங்கும் பரவி இனிதே
தேக்கமின்றி இந்த உலகம் திரு அருள்பட ஞானலோகமாக மாறக்கூடும்
கூடவே குறைவின்றி சடுதி
குவலயம் எங்கும் இந்த அற்புதத்தை
7. ஈடேற்றம் செய்யவே அரங்கன் நீ அவதரித்திருக்க
இந்த உயர் நிலைகளெல்லாம் ஆறுமுகன் என்னருளால் தடையற சடுதி உலகம் கண்டு
தரணியோரெல்லாம் ஞானிகளாக மாற்றம் பெற்று
இடரின்றி அரங்கன் உன்வழி இந்தயுகமே ஞான யுகமாக மாற்றங்காணும்
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–